விட்டதாகவும் அதுபற்றி நடவடிக்கை எடுக்க விண்ணப்பம் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத்தான் விடை அளித்தேன். அம்மாதிரி புகாரை விசாரித்ததில் ஒரு "ஸ்கீம்" போட்டு, சட்டத்திற்கு உட்பட்டு, கமிஷனர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விற்பனை செய்யப்பட்ட மட்டில் அந்த விற்பனை எல்லாம் சரியான விற்பனைதானா? விற்ற நிலத்திற்கு சரியான தொகை பெறப்பட்டு இருக்கிறதா என்பதைக் கமிஷனர் விசாரித்தாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம், சட்டப்படி, முறைப்படி விசாரணை செய்யப்பட்டு வருகிற விஷயம்.

திரு. எஸ். முருகையன் : விற்ற நிலம் போக, மீதி நிலங்களை யாவது விற்காமல் நிறுத்த, சர்க்கார் தடை உத்தரவு போடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே சர்க்கார் எல்லா வற்றையும் செய்ய முடியவில்லை. மேலே கோர்ட்டு இருக்கிறது. அற நிலைய இலாகா எந்த அளவுக்கு, சட்டத்திற்கு உட்பட்டு கவனம் செலுத்த முடியுமோ அதிலெல்லாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த விசாரணை எத்தனை நாளாக நடைபெற்று வருகிறது, எவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் கால வரம்பு ஒன்றும் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அஹோபில மடத்தைப் பொறுத்தவரையில் ஊழல்கள் பல நிறைந்து இருப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி விசாரிக்க, தனிக் குழு ஒன்றினை நியமித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க, அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டப்படி அற நிலைய இலாகாவுக்கு வரம்பு இருக்கிறது. அதற்குமேல் கோர்ட்டு இருக்கிறது. தனிக் குழு வைத்துப் பயன் இல்லை.

Funds under 'Housing' in Plan Schemes

*265 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any communication from the Centre has recently been received on the provision and utilisation of adequate funds under 'Housing' in Plan Schemes; and

(*b*) if so, the action taken thereon?

4th November 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes. The Union Minister for Works and Housing suggested that a bigger provision for 'Housing' may be made in the last year of the Third Five-Year Plan and also in the Fourth Five-Year Plan.

(b) An increased provision of Rs. 308.55 lakhs has been made in the last year of the Third Five-Year Plan for both Plan and Non-Plan Housing Schemes (Plan Rs. 103.55 lakhs and Non-Plan Rs. 205 lakhs). As for the Fourth Five-Year Plan, an outlay of Rs. 42.05 crores under Plan and Rs. 12 crores under Non-Plan on 'Housing' has been suggested by this Government.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வீட்டு வசதி பற்றுக்குறை நகரப் புறங்களில் மட்டுமின்றி கிராமப் புறங்களிலும் பரவி வருகிறது. இந்த நிதி ஒதுக்கலில் கிராம கூட்டுறவு சொசைடிகளுக்கும், நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் "வில்லேஜ் ஹவுஸிங் பிராஜெக்ட்" கீழ் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இதுவரையிலும் செலவழித்தது, இந்த ஆண்டு இறுதிவரை செலவழிக்கக் கூடியது ரூ. 27,99,000.

திரு. வை. சங்கரன் : பல ஜில்லாக்களிலே தொழிலாளர்களின் வீட்டுவசதி கோவாபரேடிவ் வொர்க்ஸ் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. இதையெல்லாம் பழையபடி மறுபடியும் நடத்தி முடிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

வீட்டு வசதி போர்டு

*266 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில வீட்டு வசதி போர்டில் (1) மேஜை நாற்காலிகள், (2) விளம்பரம் செய்து பணம் கொடுப்பது, (3) நிரந்தர முன் பணம் கொடுத்தல் போன்ற இனங்களுக்கான பதிவுகள் சரிவரச் செய்யப் படுவதில்லை என்று புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா? அதன் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : Certain defects were pointed in paragraphs 162, 163, 164 of the Audit Report of the State Housing Board 1961–62 in regard to the maintenance of the Furniture Register, Register of Permanent Advances and Advertisement Charges eRgister. The above defects have since been rectified.